©
தமிழ்நாடு அரசு
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 1.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 48] சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 21, 2011
மார்கழி 5, திருவள்ளுவர் ஆண்டு–2042

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**2011–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20–ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது இதன்மூலம் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகிறது :—**

**தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2011.**

**1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதோர் அவசரச் சட்டம்.**

இம்மாநிலச் சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாததாலும், இதன் பின்பு காணுகின்ற நோக்கங்களுக்காகத் தாம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியதைத் தேவையானதாக்குகின்ற சூழ்நிலைகள் இருந்து வருகின்றன என்று தமிழ்நாடு ஆளுநர் தெளிவுறத் காண்பதாலும்:—

எனவே, அரசமைப்புச் சட்டத்தின் 213–ஆம் உறுப்பின் (1)–ஆம் கூறின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, ஆளுநர் பின்வரும் அவசரச்சட்டத்தை இப்போது இதன்மூலம் பிறப்பிக்கின்றார்:—

**குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

**1.** (1) இந்த அவசரச் சட்டம், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**தமிழ்நாடு சட்டம் 30/1983.**

**89–ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

**2.** 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் 89–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையில் “பத்தாண்டுகள் ஆறு மாதங்கள்” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, “பதினோராண்டுகள்” என்னும் சொல்லானது அமைக்கப்படுதல் வேண்டும்.

2011–ஆம் ஆண்டு,
நவம்பர் திங்கள்,
20–ஆம் நாள்.

**கே. ரோசையா,**
*தமிழ்நாடு ஆளுநர்.*

## விளக்கவுரை

தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில், 2001—ஆம் ஆண்டு மே திங்கள் 25—ஆம் நாளிலிருந்தும், மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2001—ஆம் ஆண்டு மே திங்கள் 26—ஆம் நாளிலிருந்தும் ஓராண்டுக்கால அளவிற்கு 1983—ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 89—ஆம் பிரிவின் (1)—ஆம் உட்பிரிவின்கீழ் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். மேற்சொன்ன கால அளவிற்குள்ளாக மேற்சொன்ன கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்த இயலவில்லையாதலால், மேற்சொன்ன சட்டத்தைத் திருத்தியதன்மூலம் மேற்சொன்ன பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தனி அலுவலர்களின் பதவிகால அளவானது 2011—ஆம் ஆண்டு மே திங்கள் 24—ஆம் நாளுக்கும் அப்பால் ஆறு மாதங்களைக் கொண்ட ஒரு கால அளவிற்குக் கடைசியாக நீட்டிக்கப்பட்டது. அவர்களின் நியமன கால அளவானது தொடக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2011—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24—ஆம் நாளன்றும், மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2011—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25—ஆம் நாளன்றும் முடிவடைவதாக உள்ளது.

2. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவதற்காக அரசினால் ஏற்பளிக்கப்பட்டவாறான கால அட்டவணையின்படி முதல் கட்டத்தில் முதல் இரண்டு நிலைகளுக்காக தேர்தல்கள் முறையே, 2007—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 7—ஆம் நாளன்றும், 2007—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 11—ஆம் நாளன்றும் நடத்தப்பட்டன. இந்தத் தேர்தல்களின்போது நடைபெற்ற ஒரு சில நிகழ்வுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. இந்த நிகழ்ச்சிகள் இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தும் அடிப்படை நோக்கத்தையே தகர்ப்பதாக அரசு கருதுகிறது. அரசானது, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை அவை எங்கெங்கெல்லாம் நடைபெற்றனவோ, அங்கெங்கெல்லாம் நீக்கம் செய்வதெனவும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் புதிய தேர்தல்களை நடத்துவது எனவும் முடிவு செய்து அதற்கிணங்கிய வகையில் ஆணையிட்டுள்ளது. புதிய தேர்தல்களுக்கான புதிய தேர்தல் கால அட்டவணை ஒன்று உரிய முறையில் அரசினால் அறிவிக்கப்படும்.

3. மேற்சொன்ன பொருட்பாட்டின் காரணமாக, தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை 2011—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24—ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ நடத்த இயலாது. அனைத்துத் தொடக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்களிலும் தேர்தெடுக்கப்பட்ட குழுமங்கள் அமைத்துருவாக்கப்பட்ட பின்னர் மட்டுமே மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தவியலும். எனவே, அரசானது அந்நோக்கத்திற்காக மேற்சொன்ன, சட்டத்தைத் தக்கவாறு திருத்துவதன்மூலம் தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2011—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24—ஆம் நாளுக்கு அப்பாலும், மைய மற்றும் உச்சநிலை கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2011—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25—ஆம் தேதிக்கு அப்பாலும் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட ஒரு கால அளவிற்கு மேற்சொன்ன கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை நீட்டிப்பதெனவும் முடிவு செய்துள்ளது.

4. இந்த அவசரச் சட்டம் மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**2011—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20—ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது இதன் மூலம் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகிறது :—**

## தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2011.

## 1998—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒளிவின்மைச் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதோர் அவசரச் சட்டம்.

இம்மாநிலச் சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாததாலும், இதன் பின்பு காணுகின்ற நோக்கங்களுக்காகத் தாம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியதைத் தேவையானதாக்குகின்ற சூழ்நிலைகள் இருந்து வருகின்றன என்று தமிழ்நாடு ஆளுநர் தெளிவுறக் காண்பதாலும்:—

எனவே, அரசமைப்புச் சட்டத்தின் 213—ஆம் உறுப்பின் (1)—ஆம் கூறின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, ஆளுநர் பின்வரும் அவசரச் சட்டத்தை இப்போது இதன்மூலம் பிறப்பிக்கின்றார்:—

**1.** (1) இந்த அவசரச் சட்டம் 2011—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மை (திருத்த) அவசரச் சட்டம் என வழங்கப்பெறும். **குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

(2) இது 2011—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் நாளன்றே நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**தமிழ்நாடு சட்டம் 43/1998.** **2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1998—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டத்தின் 16—ஆம் பிரிவில் (c) எனும் கூறில் ''பதினோராண்டுகள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''பதினாறாண்டுகள்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும். **16—ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

**3.** முதன்மைச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், 2011—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் நாளன்றோ அல்லது அதற்கு பின்னரோ மற்றும் இந்த அவசரச் சட்டமானது ***தமிழ்நாடு அரசு அரசிதழில்*** வெளியிடப்பட்ட தேதிக்கு முன்னரோ, இந்த அவசரச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில், அலுவலர் எவராலும் அல்லது அதிகார அமைப்பு எதனாலும் செய்யப்பட்ட செயல்கள் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும், இந்த அவசரச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டமானது அத்தகைய செயல்கள் அல்லது நடவடிக்கைகள், செய்யப்பட்ட அல்லது எடுக்கப்பட்டபோதான அனைத்து முக்கியமான காலங்களிலும் நடைமுறையில் இருந்திருந்தாற்போன்றே சட்டத்திற்கு இணங்கிய வகையில் அனைத்து நோக்கங்களுக்காகவும் செல்லத்தக்கவாறு எப்போதுமே செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும். **செல்லத்தக்க தாக்குதல்.**

2011—ஆம் ஆண்டு
நவம்பர் திங்கள்
20—ஆம் நாள்.

**கே. ரோசையா,**
*தமிழ்நாடு ஆளுநர்.*

**விளக்கவுரை**

1998–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 16–ஆம் பிரிவின் (c) எனும் கூறின்படி 28/2006 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட, ஒப்பந்தப் புள்ளியை வரவேற்கும் அதிகாரியின் மூலம் ஒப்பந்தப்புள்ளியை வரவேற்றல் மற்றும் மதிப்பீடு செய்தல் மற்றும் ஏற்பு செய்தல் தொடர்பான மேற்சொன்ன சட்டத்தின் 9 மற்றும் 10–ஆம் பிரிவுகளுக்கான வகைமுறைகளானவை, 43/1998 எனும் என்னிட்ட மேற்சொன்ன தமிழ்நாடு சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து, அதாவது 2000–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் நாளிலிருந்து பதினோராண்டுகளுக்கு மேற்படாததொரு கால அளவிற்கு, அரசின் ஒருசில துறைகளிடமிருந்தும், பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்தும், சட்டப்படியான வாரியங்களிடமிருந்தும் மற்றும் அத்தகைய பிற நிறுவன அமைப்புகளிடமிருந்தும், அவர்களால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகள் அல்லது வழங்கப்படும் சேவைகள் தொடர்பாகக் கொள்முதல் செய்வதற்குப் பொருந்துதல் ஆகாது. கொள்முதல் செய்யும் நடைமுறையில் தொடர்ந்து நீடித்திருக்கவும், பொருள்கள் அல்லது சேவைகளைப் போட்டி அடிப்படையில் மலிவு விலையில் கிடைக்கச் செய்யவும் மேற்சொன்ன துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள், சட்டப்படியான வாரியங்கள் மற்றும் அத்தகைய பிற நிறுவன அமைப்புகள் ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் அரசானது அத்தகைய அரசுத் துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள் முதலானவற்றுக்கு வழங்கிய அந்த விலக்களிப்பினை, 43/1998 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் 16–ஆம் பிரிவின் (c) எனும் கூறின்படி 2011–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் நாளன்றும் அதுமுதற்கொண்டும் மேலும் ஐந்து ஆண்டுகளைக் கொண்டதொரு கால அளவிற்கு நீட்டிப்பதெனவும் மற்றும் அந்நோக்கத்திற்காக மேற்சொன்ன சட்டத்தின் 16–ஆம் பிரிவின் மேற்சொன்ன (c) எனும் கூறினைத் திருத்தம் செய்வதெனவும் முடிவு செய்துள்ளது.

2. இந்த அவசரச் சட்டமானது மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.